பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 626 **நாள்: 29.10.2026**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின் (CMIUDM) கீழ் ரூபாய் 130.19 கோடி மதிப்பீட்டில், 148.10கிலோ மீட்டர் நீளத்தில் மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள 678 சேதமடைந்த பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளை மேம்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க (CMIUDM) திட்டத்தின் கீழ் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீட்டில் சாலைகள் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அறிவித்துள்ளார்கள்.

இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் (GCC), சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை (DPR), ரூ.154.16 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அதில் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையின்படி முதற்கட்டமாக ரூ.130.19 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, 595 தார்ச்சாலைகள் 136.57 கிலோ மீட்டர் நீளத்தில் ரூபாய் 120.65 கோடி மதிப்பீட்டிலும், 58 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 8.47 கிலோ மீட்டர் நீளத்தில் ரூபாய் 7.33 கோடி மதிப்பீட்டிலும், 25 இன்டர் லாக் பேவ்மெண்ட் பிளாக் சாலைகள் 3.06 கிலோ மீட்டர் நீளத்தில் ரூபாய் 2.21 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம்148.10 கிலோ மீட்டர் நீளத்தில் முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க (CMIUDM) திட்டத்தின் கீழ் ரூ.130.19 கோடி மதிப்பீட்டில் மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள சேதமடைந்த 678 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கு பல்வேறு சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவுற்று இப்பணிகள் விரைவில் தொடங்கி மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.